செ.வெ.எண் - 320

## செய்தி வெளியீடு – 8.4.2010

## சத்திஸ்கரில் நக்சலைட் தாக்குதலில் பலியான தமிழகத்தைச் சேர்ந்த 3 காவலர்களின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் 15 இலட்சம் ரூபாய் நிதியுதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

சத்திஸ்கர் மாநிலம் தண்டேவடா மாவட்டத்தில் நக்சலைட்டுகள் நடத்திய தாக்குதலில் பலியான மத்திய ரிசர்வ் காவல் படையைச் சேர்ந்த 75 வீரர்களில், சென்னை கொளத்தூரைச் சேர்ந்த மோகனரங்கன், குமரி மாவட்டம் புதுக்கடை அருகே உள்ள அனந்தமங்கலத்தைச் சேர்ந்த விஜயகுமார், வேலூர் மாவட்டம் கந்திலியை அடுத்த தோக்கியம் கிராமத்தைச் சேர்ந்த சேகர் ஆகிய மூன்று வீரர்களும் இறந்த சம்பவம் குறித்து அறிந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இறந்த அனைவரின் குடும்பத்தாருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். அத்துடன், நக்சலைட்டுகளின் இந்தத் தாக்குதலில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த இந்த மூவரின் குடும்பங்களுக்கும் தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் பதினைந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக உடனடியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (8.4.2010) ஆணையிட்டுள்ளார்.

* * *